XSS01

# ஆதவா மாதிரி-முதல் இடைப்பருவத் தேர்வு – 2023-24

## சமூக அறிவியல்

வகுப்பு:10

காலம்:1:30 மதிப்பெண்கள்- 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **7x1=7**

1.பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமைவாய்ந்த நாடு எது?

அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா

2.வடபுறச் சீனப் பகுதிகளை தொடர்ச்சியாக ஆக்கிரமித்து வந்த ஜப்பான் எந்த நாட்டைத் தனது இராணுவத் தளமாக பயன்படுத்தியது?

அ) மஞ்சூரியா ஆ) மங்கோலியா இ) பாகிஸ்தான் ஈ) ஆப்கானிஸ்தான்

3.பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

அ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்
ஆ) இலையுதிர்க் காடுகள்
இ) மாங்குரோவ் காடுகள்
ஈ) மலைக் காடுகள்

4. பழங்கள் காய்வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலைத் துறையாகும்.

**காரணம்** : உலகளவில் இந்தியா மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி

5. லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது_____________.

அ) 18வயது ஆ) 21வயது இ) 25வயது ஈ) 30வயது

6.இந்திய பொருளாதாரம் என்பது____________.

அ) வளர்ந்து வரும் பொருளாதாரம்
ஆ) தோன்றும் பொருளாதாரம்
இ) இணை பொருளாதாரம்
ஈ) அனைத்தும் சரி

7.ஆரம்பத்தில் இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் தலைநகரம்_________.

அ) கோழிக்கோடு ஆ) கொச்சின் இ) மங்களூர் ஈ) கோவா

**II.எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினா எண் 14. கட்டாயமாக விடையளிக்கவும்.** **5x2=10**

8. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?
9. பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?



ஆதவா பப்ளிகேஷன்ஸ் 9092109966

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

10.'வெப்பக்குறைவு விகிதம்' என்றால் என்ன?
11.'வேளாண்மை' வரையறு.
12.பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?
13.குடியுரிமைச் சட்டம் 1955ன் படி ஒருவர் குடியுரிமை பெறும் முறைகள் யாவை?
14.உலகமயமாக்கலை சார்ந்த சீர்திருத்தங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக?

**III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 5x5=25**

15. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
16. இத்தாலியில் முசோலினியின் எழுச்சியினைப் பற்றி கூறுக.
17. i)வானிலை மற்றும் காலநிலை – வேறுபடுத்துக.
ii)வேளாண்மை இந்தியாவில் முதுகெலும்பு. – காரணம் கூறுக.
18. குடிமக்களின் கடமைகள் என்றால் என்ன? இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளைப் பட்டியலிடுக.
19. உலக மயமாக்கலின் சவால்களை எழுதுக.
20. 1910 முதல் 1930 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தின் ஐந்து முக்கிய நிகழ்வுகளைக் காலகோட்டில் எழுதுக.
21. இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்க.
1)மாளவ பீடபூமி 2)மன்னார் வளைகுடா 3)பக்ராநங்கல் அணை
4)கைலாஷ் மலைத் தொடர் 5)தார் பாலைவனம்

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் 8x1=8**

22. உலகப்போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் (1919-1930) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதைக் குறித்து வரிசையாக விவரிக்கவும்.

**(அல்லது)**

**23. கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.**

1. ரஷ்யா
2. லண்டன்
3. ஜப்பான்
4. ருமேனியா
5. மொராக்கோ
6. துருக்கி
7. கிரீஸ்
8. நாகசாகி



ஆதவா பப்ளிகேஷன்ஸ் 9092109966

Kindly send me your study materials to padasalai.net@gmail.com